விகடன்

Published: 05 JAN 2024 at 5 PM | Updated: 05 JAN 2024 at 5 PM

# செய்யாறு சிப்காட்: போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் அருள் மீதான குண்டாஸ் ரத்து - நடந்தது என்ன?!

**செய்யாறு சிப்காட் எதிர்ப்பு போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் அருள் ஆறுமுகம் மீதான குண்டாஸ் நடவடிக்கையை தமிழக அரசே ரத்து செய்து உத்தரவிட்டிருக்கிறது.**



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் 'மூன்றாவது தொழில் வளாகம் - சிப்காட்' அமைப்பதற்காக மேல்மா, நர்மபள்ளம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து 3,174 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் பணியை, தமிழக அரசு தீவிரப்படுத்தியது . விளைநிலங்களை அழிக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக விவசாயிகள் மேல்மா கிராமத்தில், கடந்த ஆண்டு ஜூலை 2-ம் தேதியிலிருந்து போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள் .125 நாள்களுக்கும் மேலாக தங்கள் வாழ்வுரிமைக்காக விவசாயிகள் உறுதியாகப் போராடி வந்த நிலையில், நவம்பர் 4-ம் தேதி காவல்துறை லத்தியோடு களத்தில் இறங்கியது .54 விவசாயிகள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டதுஅதில் ., 7 விவசாயிகள் குண்டர் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு ... அரசின் இந்த நடவடிக்கைக்கு .வெவ்வேறு சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டனர் எதிராகத் தமிழ்நாடே கொந்தளித்ததால், 6 பேர் மீதான குண்டர் சட்டம் உடனடியாக ரத்துசெய்யப்பட்டு, கைதானவர்கள் நிபந்தனை ஜாமீனிலும் விடுதலைச் செய்யப்பட்டனர்.




ஆனாலும், விவசாயிகளுக்கு ஆதரவாக முன்னின்று போராடிய உழவர் உரிமை இயக்கத்தின் தலைவர் அருள் ஆறுமுகம் மீதான குண்டர் தடுப்புக் காவல் மட்டும் தளர்த்தப்படவில்லைஇன்னமும் அவர் . பாளையங்கோட்டை சிறையில்தான் அருள் .அடைக்கப்பட்டிருக்கிறார் ஆறுமுகம் மீதான நடவடிக்கையை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில்

அவர் தரப்பில் வழக்குத் தொடரப்பட்டதுஇந்த வழக்கின் விசாரணை நேற்றைய தினம் . வந்ததுஅப்போது ., அருள் ஆறுமுகம் மீதான குண்டர் சட்ட வழக்கைத் திரும்பப் பெறும் முடிவில் தமிழக அரசு இருப்பதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்இந்த . நிலையில்தான் அருள் ஆறுமுகம் மீதான குண்டர் தடுப்புக் காவலை, தமிழக அரசு ரத்து செய்து உத்தரவிட்டிருக்கிறது .ஆனாலும், சிப்காட் போராட்டம் தொடர்பாக இன்னொரு வழக்கும் அருள் ஆறுமுகம் மீது பதியப்பட்டிருப்பதால், அதில் முன்ஜாமீன் பெற்றால் மட்டுமே சிறையிலிருந்து அவர் வெளியே வர முடியும் என்பதால், முன் ஜாமீன் பெறுவதற்கான முயற்சியில் அவரின் உழவர் உரிமை இயக்கம் தீவிரம் காட்டி வருகிறது.

அதேசமயம், அருள் ஆறுமுகம் மீதான குண்டாஸ் வழக்கை ரத்து செய்தமைக்காக தமிழக அரசுக்கு நன்றித் தெரிவித்த 'மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பின்' தேசியச் செயலாளர் ஹென்றி திபேன், `பாகுபாட்டோடு பொய் வழக்கு பதிவுசெய்த திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் தமிழக அரசை வலியுறுத்தியிருக்கிறார்.
**இது தொடர்பாக, ஹென்றி திபேன் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "உரிமைக்காகப் போராடிய விவசாயிகள்மீதான தவறான நடவடிக்கைக்குக் காரணமாக இருந்த திருவண்ணாமலை ஆட்சியர்மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சியரின் சொந்த பணத்தில் இழப்பீட்டுத் தொகையும், பின்புலமாக பொய் வழக்குகள் பதிவுசெய்ய காரணமாக இருந்த காவல்துறை அதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து விவசாயிகள்மீதான பொய் வழக்குகளையும் ரத்து செய்ய வேண்டும்" எனக் கூறப்பட்டிருக்கிறது.**

### யார் இந்த அருள் ஆறுமுகம்?

செய்யாறு சிப்காட் எதிர்ப்பு போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் அருள் ஆறுமுகத்தின் சொந்த ஊர், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகே உள்ள அத்திபாடி கிராமம். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். எட்டுவழிச் சாலை எதிர்ப்பு இயக்கத்தின் சார்பில் இவர், பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதால், காவல்துறையினர் வழக்கு பதிவுசெய்தனர். அதன் பிறகு 'உழவர் உரிமை இயக்கம்' என்ற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கினார். இந்த நிலையில்தான் செய்யாறு பகுதி விவசாயிகள், சிப்காட் தொழிற்பேட்டைக்கு எதிரான போராட்டக் களத்துக்கு அழைப்பு விடுத்ததால், அவர்களுடன் கைகோத்து தமிழக அரசின் கோபத்துக்கும், நடவடிக்கைக்கும் ஆளானார்.
https://www.vikatan.com/government-and-politics/cheyyar-sipcot-controversy-goondas-act-action-against-farmer-revoked